பக்கங்கள் 17

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 10 சனிக்கிழமை 28.10.2023 அதிர்வு 89

**காணாமல்போனோரின் உறவுகள் சண்டை:**

## கைதான ஏழு பேரும் பொலிஸ் பிணையில்

- கே.வசந்தரூபன் -

கைது செய்யப்பட்ட வடக்கு – கிழக்கு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தலைவி உட்பட 7 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று 04

# ரணில்-பஸில் கடும் மோதல்!

## ஆட்டம் காணுமா அரசு?



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மறுசீரமைப்பு குறித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ அதிருப்தி அடைந்துள்ளார் என்று அக்கட்சியின் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

பொதுஜன பெரமுன வழங்கியுள்ள பெயர்ப் பட்டியலின் பிரகாரம் அமைச்சுப் பதவிகளை 04

# வரவு - செலவுத் திட்டத்துக்கு முன்பாக அமைச்சரவையில் மீண்டும் மாற்றம்?



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் மோதல் வலுத்துள்ள நிலையில் வரவு – செலவுத் திட்டத்துக்கு முன்பாக அமைச்சரவையில் மீண்டும் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வரவு – செலவுத் திட்டத்தை வெற்றி கொள்வதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அமைச்சரவையில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், சிலபுதியமுகங்கள் அமைச்சரவையில் இணைத்துக்கொள்ளப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. 04

**ஒரு இலட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ்**

## யாழ். பல்கலைக்கு சிங்கள ஊழியர்கள்



- எஸ்.நிதர்ஷன் -

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு இலட்சம் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 04

## கொழும்பில் தமிழ் இளைஞர் கழுத்தறுத்துப் படுகொலை!

**காதல் விவகாரத்தால் விபரீதம்**



கொழும்பில் தமிழ் இளைஞர் ஒருவர் கத்தியால் கழுத்தறுத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் இன்று இடம்பெற்றுள்ளது என்று 04

# முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அமைக்க வேண்டிய அவசியம் என்ன?

## யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்திடம் லஞ்ச ஊழல் ஆணைக்குழு கேள்வி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முள்ளவாய்க்கால் நினைவுத் தூபி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதை அமைக்க வேண்டிய அவசியம் என்ன? இது குறித்து விளக்கமளிக்குமாறு லஞ்சம் மற்றும் ஊழல்கள் பற்றிய சாற்றுதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கோரியுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அமைக்கப்பட்டமை தொடர்பில் ஆணைக்குழுவுக்குக் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து ஆரம்பிக்கப்பட்டுள்ள விசாரணையின் ஒரு அங்கமாகவே லஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் விளக்கம் கோரப்பட்டுள்ளது. தூபி அமைக்கப்பட்டமை தொடர்பில் விளக்கமளிக்க பல்கலைக்கழகத்தில் பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவரை எதிர்வரும் நவம்பர் 7 ஆம் திகதி நேரில் சமூகமளிக்குமாறு பல்கலைக்கழகப் பதிவாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முள்ளவாய்க்கால் நினைவுத் தூபி அமைப்பதற்காகப் பொது நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும், அரச பல்கலைக்கழக வளாகத்தில் அனுமதி பெறப்படாமல் தூபி அமைக்கப்பட்டுள்ளது என்றும் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து லஞ்சம் மற்றும் ஊழல்கள் பற்றிய சாற்றுதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாகத் தூபி அமைக்கப்பட்டமை தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் கடந்த 19 ஆம் திகதி விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அதன் தொடர்ச்சியாக விடயம்சார் அறிவுடைய பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவரின் வாக்குமூலமொன்றைப் பதிவு செய்து கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதால், கோரப்படும் ஆவணங்களுடன் எதிர்வரும் நவம்பர் 7 ஆம் திகதி காலை 09.30 மணிக்கு அதிகாரி ஒருவரை அனுப்பி வைக்குமாறு ஆணைக்குழுவால் பதிவாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தை நிர்மாணிக்க வேண்டியதன் அவசியத்தன்மை தொடர்பிலான அறிக்கை, பல்கலைக்கழக வளாகத்தில் நினைவுச் சின்னம் ஒன்றை ஸ்தாபிக்கும் போது பின்பற்றப்படவேண்டிய நடமுறைகள் தொடர்பிலான அறிக்கை, நினைவுத் தூபியை நிர்மாணித்ததற்குரியதான கொள்முதல் கோப்பு மற்றும் அதன் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி மற்றும் நினைவுத் தூபியின் தற்போதைய நிலைமை தொடர்பிலான அறிக்கை போன்ற விடயங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக வளாகத்தினுள் அனுமதி பெறப்படாமல் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி, தமிழீழ விடுதலைப் புலிகளின் மீள் உருவாக்கத்துக்கு வழிவகுப்பதாகத் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் அதனை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறும் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருந்தன.

அதனையடுத்து 2021 ஆம் ஆண்டு ஜனவரி 08 ஆம் திகதி பல்கலைக்கழகத்தினுள் அமைக்கப்பட்டு முழுமைபெறாத நிலையில் இருந்த தூபி இடிக்கப்பட்டது.

தூபி இடிக்கப்பட்டதால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களாலும், தமிழ் உணர்வாளர்களாலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஜனவரி 09 முதல் 10 வரை யாழ்ப்பாணத்தில் பெரும் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது. அதனையடுத்து 11 ஆம் திகதி அதிகாலை மாணவர் பிரதிநிதிகளுக்கும், பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது உரிய அனுமதிகள் பெறப்பட்டு தூபி அமைக்கப்படும் எனத் துணைவேந்தரால் உறுதியளிக்கப்பட்டது.

அதன் பின்னர், நிலைமை தொடர்பில் பல்கலைக்கழகப் பேரவையில் விளக்கமளிக்கப்பட்டு அதற்கான அனுமதி பெறப்பட்டது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், தூபி அமைப்பதற்காகப் பல்கலைக்கழக நிதி பயன்படுத்தப்படுவதில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

தன்னார்வநன்கொடையாளர்களிடம் இருந்து அப்போதைய மாணவர் ஒன்றியத்தினர் சேகரித்த நிதியைப் பயன்படுத்தி தற்போதைய தூபி அமைக்கப்பட்டது. தூபி கட்டப்பட்டதற்கான நிதி விவரங்கள் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் கணக்கறிக்கையில் காட்டப்பட்டது. கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட அறிக்கை பல்கலைக்கழக நலச் சேவைகள் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

# தேசிய நல்லிணக்கத்தை சிதைக்கும் சில பிரகிருதிகளின் செயற்பாடுகள்!

## கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

தேசிய நல்லிணக்கத்தைச் சிதைக்கும் வகையிலான எகதாளப் பேச்சுக்களும் சண்டித்தனங்களும் சட்ட ரீதியாக தண்டிக்கப்பட வேண்டும். அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட விகாராதிபதி அம்பேபிட்டிய சுமன தேரரின் அண்மைக் கால செயற்பாடுகள் தொடர்பாக இன்று (28) கருத்து தெரிவிக்கும் போதே கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

தர்மத்தைப் போதிக்க வேண்டிய சிலரின் தரம் கெட்ட வார்த்தைகளும் செயற்பாடுகளும் வேதனையளிக்கின்றன.

துரதிஸ்டவசமாக இந்த நாட்டில் இவ்வாறான பிரகிருதிகள் அனைத்து தரப்பிலும் இருந்திருக்கின்றனர். இருக்கின்றனர் என்பது வேதனைமிகு விடயமாக இருக்கின்றது.

இந்த நாடு இன்றளவும் மீளமுடியாமல் தவிப்பதற்கு, பிரதான காரணமாக இருக்கும் கடந்த கால யுத்தம் தோன்றுவதற்கு இரண்டு தரப்பிலும் இருந்த இவ்வாறான பிரகிருதிகளின் கருத்துக்களும் செயற்பாடுகளுமே காரணம். இதை யாரும் மறந்து விடக்கூடாது.

அதேபோன்று உலகுக்குச் சாந்தியையும் சமாதானத்தையும் போதிக்க வேண்டியவர்களின் இவ்வாறான தரங்கெட்ட செயற்பாடுகள் தொடர்பில் மரியாதைக்குரிய பௌத்த பீடங்கள் அக்கறை செலுத்த வேண்டும்.

இந்த நாட்டில் சட்டம் என்பது அனைவருக்கும் பொதுவானதாகவே இருக்க வேண்டும். காவி உடை கவசமாக பயன்படுத்தப்படுவதைச் சட்டத்தை பாதுகாக்க வேண்டிய தரப்புக்கள் அனுமதிக்க கூடாது.

மதகுரு என்று சொல்லப்படுகின்ற சம்பந்தப்பட்ட நபரின் செயற்பாடுகள் மற்றும் பின்னணிகள் தொடர்பாக பல்வேறு சந்தேகங்கள் இருக்கின்றன.

இவை அனைத்தும் விரிவாக ஆராய்ந்து விஷக் கிருமிகள் அனைத்தும் களையப்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு.

இதுதொடர்பாக, எதிர்வரும் நாடள்களில் ஜனாதிபதியிடம் வலியுறுத்தவுள்ளேன்.அமைச்சரவையிலும் பிரஸ்தாபிப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன்.

யாதார்த்தத்தைப் புரிந்து கொண்டு ஆரோக்கியமான எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஸ் குணவர்த்தன தலைமையிலான எமது அரசு விரைவில் இவ்வாறான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.– என்றார்.

# நிதியில்லை என்று காரணம் கூறாமல் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துக!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை



ஏறத்தாழ ஒரு முழுமையான பதவிக் காலத்தை இழந்திருக்கும் மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்தி நாட்டின் ஜனநாயக மரபைக் காக்க வேண்டும். நிதி இல்லை என்று காரணம் கூறாமல் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துங்கள்.

இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் ஊடகப் பேச்சாளருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் அரசைக் கோரியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையின் முழுவிவரம் வருமாறு–

2024 ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டாக ஜனாதிபதி கூறியிருக்கின்றார். அனேகமாக அடுத்த வருடம் நவம்பர் மாதத்துக்கு முன்பாக ஜனாபதித் தேர்தல் நடைபெறும் என்றும் அதனைத் தொடர்ந்து நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் என்றும் அறிவித்துள்ளார். 2024 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்திலும் தேர்தலுக்கான நிதி ஒதுக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படவில்லை. ஏற்கனவே வேட்பு மனுக்கள் கோரப்பட்டு கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் பல கோடி நிதியை வேட்புமனு தாக்கலுக்காக கட்டியுள்ளனர்.

ஆனால் தேர்தலுக்கு நிதி இல்லை என்று அரசு சாக்குப்' போக்குச் சொல்லிக் கொண்டு இருக்கிறது. தேர்தல் எப்பொழுது நடைபெறும் என்பது தெரியாத நிலையில் உள்ளது. உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக்கள் இரத்து செய்யப்படலாம் என்றும் அதற்கான சட்டதிருத்தம் கொண்டுவரப்படும் என்றும் சொல்லப்படுகின்றது.

இந்த நிலையில் மாகாண சபைகளுக்கான தேர்தல்களும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களும் 2025 ஆம் ஆண்டில் நடைபெறும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கடந்த ஐந்து வருடங்களுக்கும் மேலாக மாகாண சபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. மாகாண சபைகளுக்கான எல்லை மீள்நிர்ணயங்கள் ஏற்றுக் கொள்ளப்படாததன் காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டது. மீள்நிர்ணயம் செய்த பின்பு தேர்தல்கள் நடைபெறும் என்று பேசப்பட்டாலும் எல்லைகளை மீளவும் திருத்திக் கொள்வதற்கான எத்தகைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

ஆகவே, மாகாண தேர்தல் சட்டதிட்டங்களுக்கு இணங்க மாகாண சபைத் தேர்தல்களை நடத்தும்படி தமிழ் தரப்பு கோரிய பொழுதும் அதற்கான எத்தகைய நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளவில்லை.

மாறாக, வடக்கு–கிழக்கில் தான் விரும்பிய ஆளுநர்களை நியமித்து, தான்தோன்றித்தனமான முறையில் பௌத்த பிக்குகளும் இராணுவமும் பொலிஸாரும் கூட்டாகக் காணிகளைக் கபளீகரம் செய்வதும் அத்தகைய இடங்களில் புதிது புதிதாக புத்த கோயில்களைக் கட்டுவதும் எங்கோ தூரப் பிரதேசங்களில் உள்ள சிங்கள மக்களைக் கொண்டுவந்து இங்கு குடியேற்றுவதுமாக அரசு தனது நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துச் செல்கின்றது.

இந்திய–இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக ஒற்றையாட்சி முறைக்குள் அதிகார பரவலாக்கத்தின் ஊடாக மாகாணசபை முறைமை ஒன்று உருவாக்கப்பட்டது.

வடக்கு– கிழக்கு தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக மாகாணசபை முறைமை இல்லாவிட்டாலும் கூட, அதுவே இந்த அரசியல் சாசனத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாக இருக்கின்றது.

அதிகாரங்களைப் பரவலாக்கம் செய்வதற்காக அரசியல் சாசனத்தில் பதின்மூன்றாவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. மாகாணசபை அதிகாரத்தில் இல்லாத காலத்தில் நாடாளுமன்றத்தின் ஊடாகவும் ஏனைய வழிமுறைகளிலும் மாகாணததுக்கு உரித்தான பல அதிகாரங்களை மத்திய அரசு மீளப் பறித்துக் கொண்டது. இன்றும் அது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இதனூடாக மாகாணசபை ஒரு அர்த்தமற்ற நிர்வாக அலகாக மாற்றப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டு, வாழ் வுரிமை மறுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனம் அச்சத்தில் வாழ்கின்ற சூழ்நிலையை அரசு ஏற்படுத்தி உள்ளது.

சிங்கள பௌத்த மேலாதிக்கத்தைத் தடுத்து நிறுத்தித் தமிழ் மக்கள் தமது இருப்பைப் பாதுகாத்துக் கொண்டு கௌரவமாக வாழ வேண்டுமென்ற அடிப்படையிலேயே இந்திய–இலங்கை ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. பதின்மூன்றாவது திருத்தச் சட்டமும் நிறைவேற்றப்பட்டது.

ஆனால் இன்று மாகாண சபைக்கான தேர்தலை காலவரையறையின்றி ஒத்திவைத்து அதே சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிலையில், ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல்களை எதிர்கொள்ள இருக்கின்ற ஜனாதிபதியோ அல்லது ஏனைய அரசியல் கட்சிகளோ தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ள விரும்பின், குறைந்தபட்சம் வடக்கு – கிழக்குக்கான மாகாணசபைகளுக்கான தேர்தல்களையாவது நடத்த வேண்டும்.

சர்வதேச கடன்களை மீளச்செலுத்துவதற்கான காலங்கள் மாற்றியமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் தேர்தல்களுக்கான நிதி இல்லை என்று கூற முடியாது.

ஆகவே, ஏனைய தேர்தல்களுக்கு முன்பாகக் குறைந்த பட்சம் வடக்கு–கிழக்கு மாகாணசபைத் தேர்தல்களையாவது உடனடியாக நடத்த முன்வர வேண்டும். தமிழ் மக்கள் சார்பாக அரசைக் கோருகின்றோம். – என்றுள்ளது.

# முன்னாள் எம்.பி. அரியத்துக்கு எதிராக ஏறாவூர் பொலிஸார் வழக்குத் தாக்கல்!

மட்டக்களப்பு, மயிலத்தமடு – மாதவனைப் பகுதியில் மேய்ச்சல் தரைகளில் அத்துமீறி காணி அபகரிப்பு மேற்கொள்ளும் வெளிமாவட்ட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களை வெளியேற்றுமாறு கோரி கால்நடைப் பண்ணையாளர்கள்கடந்த8ஆம்திகதிமட்டக்களப்பு–கொம்மாதுறையில் முன்னெடுத்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கலந்துகொண்டமைக்கு எதிராக ஏறாவூர் பொலிஸார், நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வழக்கின் பத்திரத்தில் கையொப்பம் பெற்று விசாரணை செய்வதற்காக வவுணதீவு பொலிஸார், அரியநேத்திரனின் அம்பிளாந்துறை வீட்டுக்கு இன்று சென்றுள்ளனர். அவர்கள் முறைப்பாட்டைப் பதிவு செய்ததுடன் அதற்கான வழக்கு எதிர்வரும் நவம்பர் 17 ஆம் திகதி ஏறாவூர் நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு வருவதால் அன்றைய தினம் ஆஜராகுமாறும் பணித்துள்ளனர்.

கடந்த 8ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தின் 149 ஆவது ஆண்டு விழாவில் கலந்துகொள்ளச் சென்றபோது அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் மேற்கொண்டதாக ஏறாவூர் பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் உட்பட மேலும் 35 இற்கும் மேற்பட்டவர்களுக்கு எதிராக ஏறாவூர் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கைதான ஏழு பேரும்...

வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா நகர சபை உள்ளக மண்டபத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கக் கூட்டம் நேற்றுக் காலை இடம்பெற்ற போது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க இரு அணியினருக்கு இடையில் கைகலப்பு ஏற்பட்டது.

இது தொடர்பில் இரு பகுதியினரும் வவுனியா பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்து வடக்கு – கிழக்கு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி உட்பட 7 பேர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட 7 பேரும் வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று இரவு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் இணக்க சபையில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் வவுனியா பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

### கொழும்பில் தமிழ்...

பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலன்னாவை பிரதேசத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 27 வயதுடைய சந்திரகுமார் விஜயகாந்த் என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

ஓட்டோ ஒன்றில் வந்த மூவர் அடங்கிய குழுவினர், வீட்டிலிருந்த அந்த இளைஞரை வெளியே அழைத்து கத்தியால் சரமாரியாகக் குத்திவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

கழுத்தில் பாரிய வெட்டுக்காயங்களுக்குள்ளான அந்த இளைஞரை அவரின் குடும்பத்தினர் உடனடியாகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதிலும் அவர் உயிரிழந்துள்ளார்.

காதல் விவகாரமே இந்தக் கொலைக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கொலையாளிகளைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

### யாழ். பல்கலைக்கு...

பயிற்சி பெற்ற தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மையினத்தவர்களை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் உள்ள சிற்றூழியர் பதவி வெற்றிடங்களுக்கு நியமிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அறிய வருகின்றது.

பலநோக்கு அபிவிருத்திச் செயலணித் திணைக்களப் பணிப்பாளரின் பணிப்புரைக்கு அமைய இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் வெற்றிடங்களுக்குப் பல்பணி மேம்பாட்டு உதவியாளர்களை வழங்குதல் என்ற தலைப்பின் கீழ் பல்கலைக்கழகங்களில் உள்ள பதவி வெற்றிடங்களுக்காக நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

நாடளாவிய ரீதியில் ஒரு லட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற ஆயிரத்து 139 பேர் நியமனத்துக்குத் தகுதி பெற்றவர்கள் எனப் பட்டியலிடப்பட்டுள்ள நிலையில், பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த 7 பேர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படவுள்ளனர். எதிர்வரும் 30ஆம் திகதிக்குள் இவர்களுக்கான நேர்காணல் மற்றும் ஆள்சேர்ப்பு நடவடிக்கைகளை முன்னுரிமை அடிப்படையில் நடத்தி முடிக்குமாறு பலநோக்கு அபிவிருத்திச் செயலணித் திணைக்களப் பணிப்பாளரால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் இருந்தும் ஒரு இலட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற பலர் தொழில் வாய்ப்புக்காக விண்ணப்பத்திருக்கும் நிலையில், யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் உள்ள பதவி வெற்றிடங்களுக்குப் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளமை தமிழ் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், பல்வேறு சந்தேகங்களையும் உருவாக்கியுள்ளது.

### ரணில் - பஸில்...

ஜனாதிபதி வழங்கவில்லை என்று பஸில் ராஜபக்ஷ, ஜனாதிபதியிடம் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதுடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அதிக அமைச்சுக்களை கொடுத்துள்ளமைக்கான கண்டனத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கருத்தைக் கேட்காமல் ஜனாதிபதி அமைச்சரவை மாற்றத்தை மேற்கொண்டுள்ளமைக்குக் கடந்த சில நாள்களாகத் தொடர் ஊடக சந்திப்புக்களை நடத்தும் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் ஜனாதிபதியை எதிர்க்கும் வகையில் பல்வேறு கருத்துகளையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்தச் செயற்பாட்டுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பஸில் ராஜபக்ஷ விடம் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார் என்றும் பொதுஜன பெரமுனவின் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இதேவேளை, பொதுஜன பெரமுனவுடன் கலந்துரையாடல்கள் எதனையும் நடத்தாது ஜனாதிபதி அமைச்சரவையில் மறுசீரமைப்பைமேற்கொண்டுள்ளமைக்கு அக்கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

அதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மறுசீரமைப்புக்கு எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

ஜனாதிபதிக்கு எதிர்ப்பை வெளியிட்டு–வரும் பொதுஜன பெரமுனவினருக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார, ரணில் விக்கிரமசிங்க எவரது பின்னாலும் சென்று ஜனாதிபதிப் பதவியைப் பெறவில்லை என்றும், மாறாக அவரை அழைத்தே ஜனாதிபதிப் பதவியை பொதுஜன பெரமுன வழங்கியது என்றும் கூறியுள்ளார்.

ஐ.தே.க. மற்றும் பொதுஜன பெரமுனவினர் மாறி மாறி கருத்து மோதல்களில் ஈடுபட்டுள்ளதால் அரசுக்குள் முறுகல்கள் ஏற்பட்டுள்ளன. இந்த நிலைமை தொடர்ந்தால் எதிர்வரும் பட்ஜட் வாக்கெடுப்பில் இது தாக்கத்தைச் செலுத்தும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### வரவு - செலவு...

இதனிடையே, அமைச்சுப் பதவிகளை மாற்றுவதற்கான யோசனைகள் ஏற்கனவே அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரியவருகின்றது.

இதன்படி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பல உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பத்து பேருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பல்வேறு சந்தர்ப்பங்களின்போது கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இந்தக் கோரிக்கைக்கு ஜனாதிபதியிடமிருந்துஉரியபதில்கிடைக்கவில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் தெரிவித்துள்ளனர்.

மேலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்குத் தொடர்ந்தும் அநீதி இழைக்கப்படுமாயின் வரவு – செலவுத் திட்டத்தில் அல்லது நெருக்கடி நிலைமையின் போது அரசுக்கு உரிய பதிலடி கொடுக்கப்படும் என்று கட்சியின் உறுப்பினர்கள் பலர் தெரிவித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



# சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிராக உச்சபட்ச சட்டத்தை அமுல்படுத்துங்கள்

## எதிர்க்கட்சியாகிய நாம் பூரண ஆதரவை வழங்குவோம் என்கிறார் சஜித் பிரேமதாச



இன்றைய சமூகப் பரப்பில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் அச்சுறுத்தல்கள் பெரும் சமூகச் சீர்கேடாக மாறியுள்ளன. அரச அதிகாரிகள் கூட சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்து வருவதாக புள்ளி விவரங்களை முன்வைத்தாலும், அரசின் பொறுப்பு தரவுகளை முன் வைப்பது மாத்திரமன்றி, சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்க நடவடிக்கை எடுப்பதே.

சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிராக உச்சபட்ச சட்டத்தை அமுல்படுத்துங்கள். எதிர்க் கட்சியாகிய நாம் பூரண ஆதரவை அதற்கு வழங்குவோம்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத் திட்டத்தின் கீழ் 40 ஆவது கட்டமாக அவிசாவளை சாந்த மரியாள் கல்லூரிக்கு சிமாட் வகுப்பறை உபகரணங்களை வழங்கும் நிகழ்வு நேற்று (27) இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க் கட்சித் தலைவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்று கையில்–

நாட்டின் சட்ட கட்டமைப்பு வலுவாக இல்லாததால், இதுபோன்ற துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு நெகிழ்வான தண்டனைகள் கிடைக்கின்றன . இறுதியில் அவர்கள் அரசின் வரிப்பணத்தில் சிறையில் பராமரிக்கப்படுகின்றனர்.

இந்த சிறுவர் துஷ்பிரயோகங்களை எமது சமூகத்தில் இருந்து இல்லாது ஒழிப்பதற்கும், சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதற்கும் வலுவான சட்டக் கட்டமைப்பைக் கொண்டு வர வேண்டும். பாதுகாப்புப் படைகள் பலப்படுத்தப்பட வேண்டும். தற்போதுள்ள சட்டங்கள் திருத்தப்பட்டு கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும்.

சகாப்தத்தின் மனிதாபிமான பணியாக சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க பாதுகாப்புப் படைகள் பயன்படுத்தப்பட வேண்டும். இதற்கு எதிர்க்கட்சி பூரண ஆதரவை வழங்கும். வெறும் தரவுகளை முன்வைக்காமல் முதுகெலும்பைப் பலப்படுத்திக் கடுமையான விதிமுறைகள் கொண்டு வரப்பட வேண்டும்.

வருடத்துக்கு இருமுறை மின் கட்டணத்தை திருத்தம் செய்வதாக அரசு உறுதியளித்தாலும்,மின்சார கட்டணம் 3 ஆவது தடவையாகவும் திருத்தப்பட்டு கிட்டத்தட்ட 500 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் பெரும்பான்மையான மக்கள் நிர்க்கதிக்காளாகியுள்ளனர்.

மக்கள் படும் துன்பம் ஆட்சியாளர்களுக்கு புரியவில்லை. மின்கட்டண உயர்வால் ஒரு குடும்ப அலகு உணவு மற்றும் கல்விக்கு ஒதுக்கும் செலவுப் பணம் கூட குறைந்துள்ளது. நாடு எவ்வளவு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டாலும் மக்கள் படும் துன்பங்களைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் அரசுக்கு அவ்வாறான புரிதல் இல்லை.

தற்போது மக்கள் மின்சாரக் கட்டணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே வீதியில் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர். அடக்குமுறை, அசௌகரியம், ஏழ்மை போன்றவற்றால் சுமக்க முடியாத சுமையைத் சுமந்து கொண்டிருக்கின்றனர்.

சட்ட விரோதமாக அதிகரிக்கப்பட்ட மின் கட்டணத்தை வாபஸ் பெற வேண்டும். தவறான தரவுகளை முன்வைத்து மேற்கொள்ளப்பட்ட இந்தச் செயற்பாடுக்கு ஜனாதிபதி,அமைச்சர் மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு என்பன பொறுப்பு கூற வேண்டும்.– என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பயனற்ற ஜெனிவா மன்றம்

'எல்லோரும் ஏறி விழுந்த குதிரையில் சக்கடத்தார் தானும் ஏறிச் சறுக்கி விழுந்தாராம்' - என்ற பேச்சு மொழி நம் மத்தியில் உண்டு.

2019 ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதலுக்கு நீதி, நியாயம் பெறுவதற்கு உதவி கேட்டு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் கதவைத் தட்டி இருக்கும் கொழும்பு பேராயர் கர்த்தினால் மல்கம் ரஞ்சித்தான் இப்போது சக்கடத்தார் போல தோற்றுகின்றார்.

யுத்த காலத்தில் இடம்பெற்ற போர் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றுக்கு நீதி பெற்றுக் கொள்வதற்காக கடந்த 15 ஆண்டுகளாக இவ் விடயங்களில் சர்வதேசத்தின் மேடையான ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் அதன் ஜெனிவா அலுவலகத்திடமும் அலைந்து களைத்துப் போய் நிற்கின்றார்கள் ஈழத் தமிழர்கள்.

அதே குதிரையில் தமது விடயத்துக்கும் ஏறிப் பயணிக்க முயல்கின்றார் கர்த்தினால் மல்கம் ரஞ்சித்.

உலகம் முழுவதும் பலமான புகலிடத் தமிழர்களைக் கொண்ட ஈழத் தமிழர்களுக்கு வெறும் கையால் முழம் போட்டுப் பாசாங்கு பண்ணி, வருடாந்த அமர்வுத் திருவிழா நாடகங்களை ஆரவாரமாக நடத்திக் காட்டிய ஜெனிவா மன்று, அதே பாடத்தைத்தான் கர்த்தினாலுக்கும் புகட்டும் என்பது படுநிச்சயம்.

இது தொடர்பில் ஜெனிவா சென்ற கர்த்தினால் மல்கம் ரஞ்சித், அங்கு ஐ.நா. மனித உரிமைகளுக்கான பிரதி ஆணையாளர் நடா அல் நஷிஸ் சீமாட்டியைச் சந்தித்துப் பேசி இருக்கிறார்.

45 வெளிநாட்டுப் பிரஜைகள் உட்பட 269 பேர் உயிரிழக்கக் காரணமான இந்தத் தொடர்க் குண்டுத் தாக்குதல் குறித்து சர்வதேச கண்காணிப்புடன் கூடிய விரிவான புலன்விசாரணைக்கு இப்போதுள்ள ரணில் - ராஜபக்ஷ அரசு இணங்கவில்லை என்ற முறைபாட்டுடன் ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் உயரதிகாரிகளைச் சந்தித்திருக்கின்றார் கர்த்தினால் மல்கம் ரஞ்சித்.

இந்த விடயம் குறித்து விசாரிப்பதற்கு தற்போதைய ஜனாதிபதி நியமித்துள்ள ஆணைக்குழு மற்றும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு போன்றவற்றை கர்த்தினால் தரப்பும் நிராகரித்துவிட்டது. தொடர் குண்டுத் தாக்குதல் குறித்து இப்போது புதிய தகவல்களை அம்பலப்படுத்திய 'சனல் - 4' தொலைக்காட்சி நிறுவனமும் அந்தக் குழுக்களை ஏற்க மறுத்துவிட்டது.

இந்தப் பின்புலத்திலேயே நீதியான விசாரணைக்கு வழி செய்ய உதவுமாறு கோரி ஜெனிவா மன்றத்தின் கதவுகளைத் தட்டுகிறார் கர்த்தினால்.

பல்லாயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டு, மனித குலத்துக்கு எதிராக ஈவிரக்கமற்ற கொடூரங்கள் அரங்கேறிய விவகாரம் தொடர்பில் ஒரு விசாரணைக்குக் கூட இலங்கை இணங்காத போதும், அது விடயத்தில் 15 வருடங்களாக தீர்மானங்கள் மேல் தீர்மானங்கள் நிறைவேற்றுவதை தவிர வேறு எதையும் உருப்படியாக செய்யாத ஜெனிவா மன்றம், ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதல் விவகாரத்தில் நீதி கிடைக்க ஏதேனும் செய்யும் என்று நம்புவது மலடி பிள்ளை பெறும் கதையாகத்தான் இருக்கும்.

## சிறு மற்றும் மத்தியத்தர மக்களுக்காக கொழும்பு நகரத்தில் 5 வீட்டுத்திட்டங்கள்

### இராஜாங்க அமைச்சர் அருந்திக்க தெரிவிப்பு

சிறு மற்றும் மத்தியத்தர மக்களுக்காக கொழும்பு நகரத்தில் 05 வீட்டுத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ தெரிவித்தார்.

அதற்கான இணக்கப்பாட்டினை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீன அரசுடன் செய்துகொண்டுள்ளார் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

2024 ஆம் வரவு – செலவுத் திட்டத்தின் பின்னர் வீடமைப்பு அதிகார சபையில் தடைப்பட்ட திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

"இலங்கை இயற்கை அம்சங்களுடன் கூடிய, காலநிலை வலயங்கள், இயற்கை வளம் என்பவற்றை நிறைவாக கொண்ட அழகிய நாடாகும். பெறுமதியான கனிய வளங்களும் உலகில் இயற்கை அனர்த்தங்கள் குறைந்த நாடாகவும் இலங்கை காணப்படுகிறது. எமது நாட்டின் மிகப் பெறுமதியான வளமாக காணிகளே காணப்படுகின்றன. சனத்தொகை அதிகரிப்பினால் காணி களுக்கான பெறுமதியும் அன்றாடம் அதிகரிக்கிறது. நகரங்களை அண்டிய பகுதிகளிலும் அதேநிலை காணப்படுகிறது. நகர அபிவிருத்தி அதிகார சபையின் வசமாக பெறுமளவான காணிகள் உள்ளன.

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் உள்ளன. அவற்றில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட சில வேலைத்திட்டங்களும் உள்ளன. நகர நிர்மாணம் மற்றும் நகர விருத்தி திட்டங்களும் காணப்படுகின்றன. அத்தோடு உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகளுக்கு அவசியமான காணிகளும் உள்ளன.

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அவசியமான நல்ல வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக வருமானம் ஈட்டும் வகையில் காணிகளை பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மெகலம் வீதியின் பெறுமதியான காணிகளை குறிப்பிட முடியும்.

கண்டி நகரம், போகம்பரை சிறைச்சாலை, நுவரெலியா உள்ளிட்ட அனைத்து நகரங்களிலும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணிகள் பேர்ச்சஸ் முதல் ஏக்கர் அளவிலான காணிகள் காணப்படுகின்றன. சில காணிகள் தொடர்பிலான தகவல்கள் கிடைக்கவில்லை. அவற்றை தேடியறியும் பணிகள் ஆரம்பிக்கப்படும். போகம்பர சிறைச்சாலை பகுதியை மையயப்படுத்திய புதிய முதலீடுகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் உரிய நிதி முகாமைத்துவத்தின் காரணமாக வீடமைப்பு அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை மீள ஆரம்பிக்கும் இயலுமை கிட்டியுள்ளது. 2024 வரவு செலவு திட்டத்துடன் அந்த திட்டங்களை ஆரம்பிக்க எதிர்பார்த்திருக்கிறோம். சில வேலைத்திட்டங்களில் மோசடிகள் நிகழ்கின்றன. அவ்வாறான செயற்பாடுகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சு முன்னெடுக்கும்.

அதேபோல் சிறு மற்றும் மத்திய தர வருமானம் ஈட்டும் மக்களுக்காக கொழும்பில் 05 வீட்டுத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதற்காக மொத்தமாக 350 டொலர் மில்லியன்கள் செலவாகும். ஜனாதிபதியின் அண்மைய சீனாவிற்காக விஜயத்தின் போது ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டிற்கு அமைய, 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை கிடைத்துள்ளன. இத்திட்டத்தின் கீழ் 2500 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

அத்தோடு கொழும்பில் நீர் நிரம்புவதை தடுப்பதற்கு தாழ்நில அபிவிருத்தி அதிகார சபையினால் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. கடல் தாவரங்கள் மற்றும் சதுப்பு நிலங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைளும் எடுக்கப்பட்டுள்ளன.

வெள்ளப் பாதுகாப்பிற்கான மக்களிடத்திலிருந்து பெறப்பட்ட காணிகள் அழிவடைகின்றன. காணிகளை கையகப்படுத்தும்போது வழங்கப்பட வேண்டிய நட்டயீடுகளும் சிலருக்கு வழங்கப்படவில்லை. அந்த நிலைமைக்கு மாறாக கொழும்பு நகரில் பிரதான காணிகளை பெற்றுக்கொள்ளும்போது அறிவியல் முறைமையொன்றை பின்பற்ற எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டின் அபிவிருத்திக்காக முன்னெடுக்கும் பயணத்தில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு உயரிய பங்களிப்பை வழங்கும்." – என்றார்.



# சுகாதாரம், கல்வித் துறையின் பிரச்சினை தொடர்பில் ஆராய்வு

நாட்டின் சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளின் தற்போதைய பிரச்சி னைகள் மற்றும் அதன் எதிர்காலம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கான புரிந்துணர்வு சார் சந்திப்பொன்று நேற்று முன்தினம் (26) எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் பிராந்திய பணிப் பாளர் சஞ்சய் விஜேசேகர ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஐக்கிய நாடுகளின் சர்வதேச சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கூக்கும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தார்.

ஐக்கிய நாடுகளின் சர்வதேச சிறுவர் நிதியம், ஐக்கிய நாடுகள் சனத் தொகை நிதியம் மற்றும் உணவு விவசாய ஸ்தாப னம் என்பவற்றுடன் இணைந்து இலங் கையின் சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளுக்கு ஐக்கிய மக்கள் சக்தியால் எவ்வாறு செயலூக்கமாக பங்களிக்க முடியும் என்பது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் இங்கு கருத்துத் தெரிவித்தார்.

எமது நாட்டின் சுகாதாரம் மற்றும் கல்வி முறைமைகளை மேம்படுத்தும் வகையில் யுனிசெப் அமைப்பு கூடிய ஒத்துழைப்பை வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச யுனிசெப் பிரதிநிதிகளிடம் கடுமையாக கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கலந்துரையாடலில், இலங்கை குடும்பங்கள் எதிர்கொள்ளும் ஊட்டச்சத்துச் சவால்கள், எமது நோய் தடுப்பு மற்றும் குணப்படுத்தும் சிகிச் சைகள், சுகாதாரத் துறையில் நிலவும் பிரச்சினைகள் குறித்து இரு தரப்பினரும் அவதானம் செலுத்தினர்.

# இனவாதத்தை தூண்டும் வகையில் அம்பிட்டிய தேரரின் நடவடிக்கைகள்

## சட்ட நடவடிக்கை எடுக்கக் கோருகிறார் ஜீவன் தொண்டமான்

இனவாதத்தை தூண்டும் வகையில் செயற்படும் மட்டக்களப்பு, அம்பிட்டிய சுமன ரத்ன தேரருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு பொலிஸ்மா அதிபரிடம், இலங்கைத் தொழிலாளர் காங்கிர ஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங் கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் இந்த விவகாரம் தொடர் பில் பொலிஸ் தலைமையகத்தில் அமைச்சர் முறைப்பாடு ஒன்றையும் பதிவு செய்துள்ளார்.

தேரரின் கடந்த காலச் செயற்பாடுகள் இன மோதலை ஏற்படுத்தும் நோக்கில் அமைந்துள்ளதால் அது தொடர்பில் உரிய வகையில் விசாரணை நடத்தி பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதிக்கும், பொது மக்கள் பாது காப்பு அமைச்சருக்கும், தனக்கும்



அறிக்கையொன்றை வழங்குமாறும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட் டுள்ள அவர்,

“தமிழ் மக்களை இலக்கு வைத்து அம்பிட்டிய சுமன ரத்ன தேரர் வெளியிட் டுள்ள கருத்துக்கள் இனக் குரோதத்தை விதைக்கும் வகையில் உள்ளன. அரசால் முன்னெடுக்கப்பட்டுவரும் நல்லிணக்க முயற்சிகளைச் சீர்குலைக் கும் வகையிலும் அமைந்துள்ளன.

கொரோனா பெருந்தொற்றால் எமது நாட்டு பொருளாதாரம் சரிந்தது. அதன் பின்னர் அரசியல் குழப்பத்தால் அதல பாதாளத்திலேயே விழுந்தது.

எனவே, அனைவரும் இணைந்து செயற்பட்டால்தான் இந்த நாட்டை கட்டியெழுப்பலாம். நாட்டில் முன்னேற் றத்துக்கு இன, மத நல்லிணக்கம் மிக முக்கியம்.

இந்த நிலையில், இனவாதம் கக்கி, இன முறுகலை ஏற்படுத்தும் வகையில் தேரர் செயற்பட்டு வருகின்றார்.

கருத்துச் சுதந்திரம் என்ற போர்வை யில் அவர் சட்டத்தைக் கையில் எடுத்து செயற்பட முற்படுகின்றார். எனவே, அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும்.” – என்றார்.



# யாழ். பல்கலைக் கழகத்தில் திருமந்திர ஆன்மீக மாநாடு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக சைவ சித்தாந்த துறையும் அகில இலங்கை சைவ மகா சபையும் இணைந்து திருமந்திர ஆன்மீக மாநாடு ஒன்றை இன்று (28) யாழ்ப்பாணத்தில் நடத்தின.

ஒன்றே குலமாய் திருமந்திரம் காட்டும் அன்பே சிவத்துக்கு உயிர் கொடுப்போம் எனும் தொனிப்பொருளில் யாழ். பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறைத் தலைவர் கலாநிதி பொன்னத்துரை சந்திரசேகரம் தலைமையில் திருமூலர் தினமான இன்று சனிக்கிழமை பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டு மங்கள விளக்கேற்றலுடன் தேவாரம் இசைக்கப்பட்டு நந்திக் கொடி ஏற்றப்பட்டு மாநாடு இடம்பெற்றது.

இந்த மாநாட்டில் இலங்கையின் வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட இந்தியாவிலிருந்தும் இந்து சமயம் சார்ந்த பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டனர்.

வடக்கு, கிழக்கு, மலையகங்களில் உள்ள ஆதீனங்களின் குருமுதல்வர்கள், யாழ். பல்கலைக்கழக மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக சைவ சித்தாந்த மற்றும் இந்து நாகரீகத்துறை சார்ந்த விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள், இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த மதத் தலைவர்கள், கல்விமான்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் கலந்து கொண்டார்.





















# திருக்கோவில் பிரதேசத்தில் வீடமைக்க அடிக்கல் நடுகை!



(அ.அஸ்வர்)

அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலர் பிரிவிலுள்ள சாகாமம் மீள்குடியேற்றக் கிராமத்தில் வீடற்று வாழ்ந்து வந்த குடும்பங்களுக்கு புதிய வீட்டுக்கான அடிக்கல் நடப்பட்டது.

திருக்கோவில் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளரின் ஒழுங்கமைப்பில் திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் சாகாமம் கிராமத்தில் நேற்று முன்தினம் (26) இந்த நிகழ்வு இடம்பெற்றது. கடந்த காலத்தில் யுத்தம் காரணமாக வீடுகளை இழந்து சாகாமம் கிராமத்தில் வாழ்ந்து வரும் வறிய குடும்பங்களுக்கு புதிய வீடுகள் வழங்கும் பொருட்டு இதற் கான அடிக்கல் அம்பாறை மாவட்ட மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம வால் நடப்பட்டது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட செயலக பிரதம பொறியலாளர் ஏ.எம். சாக்ஹீர் உதவி திட்டமிடல் பணிப்பாளர் அனோஜா உஷாந், பொருளாதார, தொழிநுட்ப உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர் என பலரும் கலந்துகொண்டனர்.

# அலுவலக நடைமுறை தொடர்பில் அம்பாறையில் பயிற்சிச் செயலமர்வு

(அ.அஸ்வர்)

அம்பாறை மாவட்ட செயலகத்தின் புதிய உத்தியோகத்தர்களுக்கான அலுவலக நடைமுறை தொடர்பான பயிற்சிச் செயலமர்வு அம்பாறை மிஸ்ஸகா பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் அம்பாறை உதவி மாவட்ட செயலாளர் விமன்ச செனவிரத்ன கடிதங்களை கோவையிடல் மற்றும் குறிப்பு எழுதுதல் தொடர்பான நேரடிப் பயிற்சியை வழங்கினார்.



இந்தப் பயிற்சி பட்டறைக்கு அம்பாறை மாவட்ட செயலக மாவட்ட விவசாய அலுவலகம், மாவட்ட சமுர்த்தி அலுவலகம், காணி மற்றும் மாவட்ட பதிவாளர் அலுவலகம், நிர்வாகப் பிரிவு, கணக்குப் பிரிவு, உள்ளக கணக்காய்வுப் பிரிவு. மற்றும் திட்டமிடல் பிரிவு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# சமுர்த்திப் பயனாளி மாணவருக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கல்

(அ.அஸ்வர்)

சமுர்த்தி சிசுபல வேலைத் திட்டத்தின் கீழ் திருகோணமலை குறிஞ்சாக்கேணி வலயத்துக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி பயனாளிகளின் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கான அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

குறிஞ்சாக்கேணி சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஏ.ஜி.எம். அர்ஷாத் மற்றும் வங்கி கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் ஆகியோரின் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாகக கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச். கனி கலந்து கொண்டார்.

சிறப்பு அயிதிகளாக தலைமையக முகாமையாளர் ஏ. முஹ்சீன், முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.ஐ. மின்பாக், கருத்திட்ட முகாமையாளர் எம்.எம். றிஸ்வி, குறிஞ்சாக்கேணி அறபா மகா வித்தியாலய அதிபர், குறிஞ்சாக்கேணி மகளிர் வித்தியாலய அதிபர், பிரதேச செயலக உளவள துறை உத்தியோகத்தர், சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர், ஏனைய சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வங்கி கட்டுப்பாட்டுச்சபை உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.





# கல்முனை வர்த்தகர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(பாறுக் ஷிஹான், ஏ.எஸ். மௌலானா)

நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட செயலகம், கல்முனை மாநகர சபையுடன் இணைந்து இந்த மாநகர ஆள்புல எல்லைக்குட்பட்ட வர்த்தகர்களுக்கு ஒழுங்கு செய்திருந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்று வெள்ளிக்கிழமை (27) மாநகர சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரி முஹம்மட் ஸாஜீத் ஸமான் பிரதான வளவாளராக கலந்து கொண்டு, வியாபார செயற்பாடுகளின் போது வர்த்தகர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சட்ட, ஒழுங்குகள் மற்றும் விதிமுறைகள் குறித்துத் தெளிவுபடுத்தினார்.

இதன்போது வர்த்தகர்களால் எழுப்பப்பட்ட வினாக்கள் மற்றும் சந்தேகங்களுக்கும் விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ். எம்.அஸீம், நுகர்வோர் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரிகளான ஏ.ஏ.ஏ. ஸர்பான், ஏ.பீ.எம். றிப்சாத் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.



# ஹஜ் பயணம் செய்ய விரும்புவோர் இணையத்தளத்தின் மூலம் பதியலாம்

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

2024 Mk; Mz;Lf;fhd `[; gazk; Nkw;nfhs;s vz;zpAs;s tu;fள் முஸ்லிம் சமய பண்பாட்டலு வல்கள் திணைக்களத்தின் உத்தியோக பூர்வ வலைதளத்துக்குச் சென்று அதில் வினவப்பட்டுள்ள விண்ணப்பத்துக்கு அமைவாக தங்கள் பதிவுகளை மேற் கொள்ள முடியும்.

2024 ஆம் ஆண்டுக்கான ஹஜ் முகவர்களைத் தெரிவு செய்யும் நேர் முகத் தேர்வு எதிர்வரும் நவம்பர் 02,03, 04 ஆம் திகதிகளில் நடை பெறவுள் என. இதற்கான ஏற்பாடுகளை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மேற்கொண்டு வருகின் றது.

நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப் படும் முகவர்களின் விவரங்களைத் திணைக்களம் உத்தியோக பூர்வமாக வெளியிட்டதன் பின்னர், தெரிவு செய்யப்பட்ட ஹஜ் முகவர்களுடன் மாத்திரம் 2024 ஆம் ஆண்டுக்கான ஹஜ் பயணம் செல்வதற்கான ஆயத் தங்களை மேற்கொள்ளுமாறு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை ஹஜ் குழு ஆகியன கேட்டுள்ளன.

திணைக்களத்தின்வெிள:ஃஃஅரளடஅய [illegible] என்ற உத்தியோக பூர்வ வலைத்தள முகவரியூடாக மாத்திரம் தங்கள் பதிவு களை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# நினைவுச் சின்னம் வழங்கல்

**(அஸ்ஹர் ஆதம்)**

தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் 27 ஆவது ஸ்தாபகர் தினத்தை முன் னிட்டு பல் வேறு நிகழ்வுகள் அண் மையில் இடம் பெற்றன.




இதன் போது இதன் ஸ்தாபக மாண வர்கள் குழுவும் பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதன் போது திட்டமிடல் உத விப் பணிப்பாளரும் ஸ்தாபக மாண வருமான ஒலுவிலைச் சேர்ந்த ஏ.எல்.ஹுஸை னுதீன் அதிதிகளான அமான் அஷ்ரப், ஜனாதிபதி சட்டத்தர ணியும் பல்கலைக்கழக வேந்தருமான பாயிஸ் முஸ்தபா மற்றும் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் ஆகி யோரால் நினைவுச் சின்னம் வழங் கிக் கௌரவிக்கப்பட்டார்.

# மறவன்புலோ சித்தி விநாயகர் ஆலய கதவுகளை மீளவும் திறக்க உதவுங்கள்

## பல்வேறு தரப்பிடமும் கோரும் மக்கள்

**(த.சுபேசன்)**

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரி வுக்கு உட்பட்ட மறவன்புலோ மேற்கில் அமைந்துள்ள சிதம்பர சித்தி விநாயகர் ஆலய நுழைவாயில் கதவுகளை மீள வும் திறந்து உதவுமாறு ஆலய அடியார் கள் பல்வேறு தரப்புகளிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாக ஆலய நிர்வாகத்தி னர் மற்றும் அடியவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் –

எமது ஆலயம் காலம் காலமாக எமது மூதாதையர்களால் வழிபட்டு வந்த ஓர் பிரசித்திபெற்ற தலம். அத்துடன் இந்து சமய கலாசார அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டும் உள்ளது.

இந்த நிலையில் ஆலயத்தின் வரு டாந்த அலங்கார உற்சவம் இடம் பெற்று 19. 09. 2023 ஆம் திகதி வைரவசாந்தி நிகழ்வு தினத்தன்று சைவபரிபாலன சபையினர் எனக் கூறிக்கொண்டு வந்த சிலர் மக்களின் எதிர்ப்பையும் மீறி ஆலய நுழைவாயில் கதவுகள் அனைத் தையுமே மூடி திறப்புகளை எடுத்துச் சென்றுள்ளனர்.

இதனால் அடியவர்கள் சரீர தொண்டு மற்றும் ஆலய வழிபாடுகளில் ஈடுபட முடியாத நிலை காணப்படுகிறது.

இது தொடர்பாக தென்மராட்சிப் பிரதேச செயலகம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் உள்ளிட்ட திணைக்களங்களுக்குத் தெரியப்படுத் தியும் இதுவரை மூடிய ஆலயக் கதவு களை திறந்து விடுவதற்கான நடவ டிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இந்த விடயத்தில் உரிய திணைக் களங்கள் நடவடிக்கை மேற்கொண்டு மூடிய கதவுகளைத் திறந்து அடிய வர் களின் வழிபாட்டுக்கு உதவ வேண் டும்.– என்று தெரிவித்துள்ளனர்.

# சிறுகதை நூல் வெளியீடு

**(அ.அஸ்வர்)**

ஒலுவில் ஊடக வலையமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கவிஞர் ஜே.வஹாப்தீன் எழுதிய “அவனுக்கும் சிறகுகள் உண்டு” எனும் சிறுகதை நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை (30) மாலை 4 மணிக்கு ஒலுவிலில் இடம்பெறவுள்ளது.

இந்த வெளியீட்டு விழாவில் பேராசிரியர்களான றமீஸ் அப்துல்லாஹ், எஸ்.எம்.ஐயூப், கலாநிதி ஹனீபா இஸ்மாயில், விரிவுரையாளர் அப்துர் ரசாக், கவிஞர்களான சோலைக்கிளி அதீக், பாலமுனை பாறூக், எழுத்தாளர் உமா வரதராஜன், ஒலிபரப்பாளர் பசீர் அப்துல் கையூம், அதிபர் யூ.கே. அப்துர்ரஹீம் மற்றும் ஏ.எல்.முகைதீன் பாவா ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.



# நாவலடி நாமகள் வித்தியாலயத்துக்கு மூசஸ்ரார் நிறுவனத்தால் உதவிகள்

(பழுவூரான்)

மட்டக்களப்பில் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாவலடி நாமகள் வித்தியாலத்துக்கு மூசஸ்ரார் நிறுவனத்தால் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் ஒரு நிகழ்வாக லண்டனிலுள்ள கல்தோபாக் பாடசாலை மாணவர்கள் இங்கு வருகை தந்து முதல் நாள் சங்கீத அறையைப் புனரமைத்து பாடசாலைக்குக் கையளித்தனர்.

இரண்டாவது நாள் அவர்கள் இந்தப் பாடசாலை மாணவர்களோடு இணைந்து மகிழ்ச்சிகரமான செயற்பாட்டில் ஈடுபட்டார்கள்.

மூன்றாவது நாளான நேற்று வெள்ளிக்கிழமை (27) பல்வேறு கிராமிய விளையாட்டுக்களில் பங்குபற்றினர்.



# வாசிப்பு மாதத்தில் பரிசளிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்தில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளில் கட்டுரை, வாசிப்பு போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், நூலகத்தை அதிகமாக பயன்படுத்திய மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

நூலக பொறுப்பாசிரியர் திரோஸா பாணு இதற்கான ஒழுங்குகளைச் செய்திருந்தார்.

நிகழ்வு பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் யூ.எல்.நஸார் தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.எம். அப்துல் மலிக் பிரதம அதிதியாகவும், ஆசிரிய ஆலோசகர் எம். அன்சார் கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டு பரில்களை வழங்கினர்.

பிரதி அதிபர்கள் எச்.எச்.நுஸ்ரத் பேகம், ஏ.பீ.சிரோன் டில்ராஸ் , ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.



# வரணியில் கோலப் போட்டி

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பிரதேசசபையின் வரணிப் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் வாணி விழாவும் அதனை ஒட்டிய கோலப் போட்டி நிகழ்வும் நூலக வளாகத்தில் இடம் பெற்றன.



# சென்னை சொற்பொழிவாளருக்கு கொழும்பில் பாராட்டு நிகழ்வு

சென்னையில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த சிறப்புச் சொற்பொழிவாளர் திருமதி சௌமியா அபிஷேக் ராஜ், கொழும்பு புதுச்செட்டித் தெரு சீரடி சாய்பாபா ஆலயத்தில் உரையாற்றினார்.

இவருக்கான பாராட்டு நிகழ்வு ஆலய பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதய நாயகன் தலைமையில் இடம்பெற்றது. ஆலயத்தின் சார்பில் வழங்கப்பட்ட ‘ சீரடி கதா பூஷணம்’ எனும் பட்டத்துக்கான சான்றிதழை, இலங்கை உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ். துரைராஜா, சொற் பொழிவாளரிடம் கையளித்தார். நிகழ்வில் பங்கேற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பி.குமார் இரட்னம், மற்றும் சாயி மகளிர் சங்கத் தலைவி திருமதி சர்வகுணதேவி சண்முகநாதன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.









# பாலஸ்தீனத்தில் விரைவில் அமைதி திரும்ப வேண்டும்!

## பாலஸ்தீன தூதுவருடனான சந்திப்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

(அஸ்ஹர் ஆதம்)

பாலஸ்தீனத்தில் விரைவில் அமைதி நிலை திரும்ப வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு. போரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நிலையை காணும் போது கவலையளிக்கின்றது.

இவ்வாறு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் ஹம்தல்லா செயிட்டை பாலஸ்தீன தூதரகத்தில் சந்தித்து கலந்துரையாடிய போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் குழுவொன்று நேற்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் பாலஸ்தீன தூதுவரை சந்தித்து கலந்துரையாடியது.

கட்சியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன், பிரதித் தவிசாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.இராஜதுரை ஆகியோரும் இதில் இணைந்திருந்தனர்.

தற்போது அங்கு நிலவும் நிலவரம் பற்றி கேட்டறிந்து கொண்டதோடு, போரால் உயிரிழந்த மக்களுக்கு தமது அனுதாபங்களையும் அமைச்சர் இதன் போது தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன விவகாரத்தில் இலங்கை மக்களது நிலைப்பாட்டிலேயே தானும் தனது கட்சியும் இருப்பதாகவும், எந்தவொரு பிரச்சினைக்கும் போர் தீர்வல்ல எனவும் இதன்போது தூதுவரிடம் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மண்முனை மக்களுக்கு வாழ்வாதார உதவிகள்!

(பழுவூரான்)



பிரிட்டனைத் தளமாகக் கொண்டியங்கும் 'ஒரு பானை' அமைப்பால் மண்முனை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும், பெண்கள் தலைமை தாங்கும் 10 குடும்பங்களுக்கு உலர் உணவு வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை (26) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், உதவிப் பிதேச செயலாளர் திருமதி எஸ்.சுதாகரன், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் எஸ். பிரபாகர், ஒரு பானை தொண்டு நிறுவனத்தின் மட்டக்களப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் அறங்காவலர் வைத்திய கலாநிதி பாலசுப்ரமணியம், சிவானந்தா வித்தியாலய பிரிட்டன் கிளையின் பழைய மாணவர் சங்கத்தின் பிரதிநிதிகளாக ஜே. சாய்ராஜன் மற்றும் ஆர்.முருகதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஒரு பானை அமைப்பானது பிரிட்டனைத் தளமாக கொண்டு இயங்கும் தன்னார்வ தொண்டு நிறுவனமாகும். இந்த அமைப்பானது இலங்கையில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் தனது சேவைகளை வழங்கி வருகிறது. மட்டக்களப்பில் வவுணதீவு, கிரான் மற்றும் வாகரை பிரதேச செயலர் பிரிவில் உள்ள வறுமைக் கோட்டுக்குள் வாழும் முதியவர்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கி வருகிறது.

மட்டக்களப்பின் பின்தங்கிய பிரதேசத்தில் உள்ள வறிய மாணவர்களில் விஞ்ஞான பிரிவில் கல்வி கற்பவர்களை நகரப் பகுதில் விடுதி வசதிகள் வழங்கி அவர்களது கல்விக்கு தேவையான உபகரணங்களை வழங்கி அவர்களது கல்வியை வளர்க்கும் செயல்பாடுகளுக்கு வைத்திய கலாநிதி அருள்நிதியுடன் இணைந்து சேவைகளை முன்னெடுத்து வருகிறது .

அண்மையில் மட்டக்களப்பு பெரிய கல்லாறு உதயபுரம் பாடசாலைக்கு அவசியமான தளபாடங்கள் திருத்தி அமைத்து வழங்கி இருந்தது .

அதேபோன்று கிழக்கு பல்கலைக் கழக விஞ்ஞான பீடத்தால் நடத்தப்படும் வெளிவாரி பட்டப்படிப்பில் கல்வி கற்க வுள்ள வறிய குடும்பத்தைச் சேர்ந்த 5 மாணவர்களுக்கு வட்டியற்ற முறையில் கடன் வழங்க முன்வந்துள்ளது.





# தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் 5 லட்சம் ரூபா பெறுமதியில் வாராந்த உதவிகள்

ஞானச்சுடர் 310 ஆவது மலர் வெளியீடும், 5 லட்சத்து 22,500 ரூபா செயற்றிட்ட உதவிகள் வழங்கலும் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வில் சிறப்பாக இடம்பெற்றன.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரின் ஞானச்சுடர் ஐப்பசி மாத 310 ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வில் வெளியீட்டுரை , மதிப்பீட்டுரையை இளைப்பாறிய அதிபர் ஆ.சிவநாதன் ஆற்றினார்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகளும் வழங்கப்பட்டன.

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்தி சங்கத்தால் நடத்தப்பட்ட சைவத் திருவிழா விழாவில், வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்குவதற்காக 40 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் கோரிக்கைக்கு அமைவாக சிறுவர்,சிரேஷ்ட பிரஜைகள், மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வுக்காக 40 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடைகள் வழங்கப்பட்டன.

ஒரு லட்சத்து 42 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான 03 சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

செம்பியன்பற்று வடக்கு பிரதேசத்தை சேர்ந்த உடுத்துறை மகா வித்தியாலயத்தில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவன், வல்வெட்டித்துறை – ஊறணி குடியேற்றத்திட்டத்தை சேர்ந்த மாற்றுவலுவுடைய குடும்பத்தை சேர்ந்த மாணவி, மன்னார் – சிவபுரம், திருக்கேதீஸ்வரத்தை சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பத்தை சேர்ந்த மாணவி ஆகியோருக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட 120 குடும்பங்களை தெரிவு செய்து குடும்ப அங்கத்தவர்களுக்கேற்ப அத்தியவசியமான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. 3 லட்சம் ரூபா பெறுமதியில் இவை வழங்கப்பட்டன. மாதாந்தம் அரிசி வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.













# ஐ.நா. தீர்மானம் புறக்கணிப்பு: அவமானம் என்கிறார் பிரியங்கா



மனிதாபிமான அடிப்படையில் உடனடியாக இஸ்ரேல் – ஹமாஸ் போரை நிறுத்தக் கோரி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா புறக்கணித்துள்ளது.

இது அதிர்ச்சியையும், அவமானத்தையும் ஏற்படுத்துகிறது என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து 'கண்ணுக்கு கண் என்பது உலகம் முழுவதையும் பார்வையற்றதாக்கிவிடும்' என்ற மகாத்மா காந்தியின் கருத்தை சுட்டிக்காட்டி தனது சமூக வலைத்தள பக்கத்தில் பதிவொன்றை பிரியங்கா காந்தி வெளியிட்டுள்ளார்.

அந்த பதிவில். காசாவில் போர் நிறுத்தம் தொர்பான வாக்கெடுப்பை நமது நாடு புறக்கணித்திருப்பது எனக்கு அதிர்ச்சியையும், அவமானத்தையும் ஏற்படுத்துகிறது. எமது நாடு அகிம்சை மற்றும் உண்மை என்ற கொள்கையின் அடிப்படையில் உருவானது. அந்தக் கொள்கைகளுக்காக தான் விடுதலைப் போராட்ட வீரர்கள் தங்களின் இன்னுயிரைத் தந்தனர்.

அந்தக் கொள்கைகள் எமது தேசியத்தை வரையறுக்கும் அரசியலைமைப்பின் அடிப்படையை உருவாக்கின்றன. அவை, சர்வதேச சமூகத்தை வழிநடத்தும் இந்தியாவின் வலிமையை பிரதிநிதித்துவப்படுத்து கின்றன.

ஒரு நிலைப்பாடு எடுக்க மறுத்து, மனிதாபிமானத்தை உடைத்து லட்சக்கணக்கான மக்களுக்கு உணவு, குடிநீர், மருந்துப் பொருள்கள், மின்சாரம் போன்றவைகள் மறுக்கப்படுவதையும், ஆயிரக்கணக்கான ஆண்கள் பெண்கள் கொல்லப்படுவதையும் அமைதியாக பார்த்துக்கொண்டிருப்பது, இந்தியா ஒரு தேசமாக நிற்பதற்கு எதிரானது என்று குறிப்பிட்டுள்ளார்.

# இந்திய கடற்படையின் முன்னாள் அதிகாரிகள் 8 பேருக்கு கட்டார் நீதிமன்றம் மரண தண்டனை!





இந்திய கடற்படையில் உயர்பொறுப்பு வகித்து ஓய்வு பெற்ற 8 முன்னாள் அதிகாரிகளை கட்டார் அரசு கடந்த ஆண்டு கைது செய்து சிறையில் அடைத்தது.

இந்த நிலையில், அவர்கள் அனைவருக்கும் கட்டார் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது என இந்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கட்டார் நீதிமன்றத்தின் தீர்ப்பு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது . தண்டனை விதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தாரை தொடர்புகொண்டுள்ளோம். அவர்களை மீட்பது தொடர்பான சட்டப்பூர்வ வாய்ப்புகளை ஆராய்ந்து வருகிறோம் என்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

முன்னாள் கப்டன்களான நவ்ஜீத் சிங் கில், பிரேந்திர குமார் வர்மா, சவுரப் வசிஸ்த் ஆகியோருக்கும் முன்னாள் கொமாண்டர்களான அமித் நாக்பால், புர்னெது திவாரி, சுகுனாகர் பாகலா, சஞ்சீவ் குப்தா ஆகியோருக்கும் ராகேஷ் என்பவருக்கும் மரண தண்டனை அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கு உளவுபார்த்த குற்றச்சாட்டின் அடிப்படையில் இவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என தகவல்கள் கூறுகின்றன.

இந்திய கடற்படையில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற இந்த 8 அதிகாரிகள் காட்டாரில் 'தஹ்ராகுளோபல் டெக்னாலஜிஸ் அண்ட் கன்சல்டென்சி சர்வீசஸ்' என்ற தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தனர்.

இந்த நிறுவனம் காட்டார் இராணுவத்துக்கு சேவைகளை வழங்கி வந்துள்ளது.

மேலும், இந்த நிறுவனம் கட்டார் கடற்படை தொடர்புடைய நீர்மூழ்கி கப்பல் திட்டம் ஒன்றில் செயல்பட்டு வந்துள்ளது. இந்த நீர்மூழ்கிக் கப்பலை கட்டார் இத்தாலிய நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கி வந்துள்ளது.

இந்த நிலையில், இந்த நீர்மூழ்கிக் கப்பல் திட்டம் தொடர்பான ரகசிய விபரங்களை இந்த 8 அதிகாரிகள் இஸ்ரேல் அரசுடன் பகிர்ந்துகொண்டனர் எனவும், இதனால், கட்டார் அரசு இவர்களைக் கைது செய்தது என்றும் கவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால், அவர்களது கைதுக்கான காரணத்தை கட்டார் அரசு அதிகார பூர்வமாக அறிவிக்கவில்லை எனபது குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேல் - ஹமாஸ் போரை நிறுத்த கோரி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் தீர்மானம் - இந்தியா புறக்கணிப்பு



இஸ்ரேல் – ஹமாஸ் போரை நிறுத்தக் கோரி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இஸ்ரேல் – ஹமாஸ் போர் 20 நாட்களைக் கடந்துள்ளது .

இந்த நிலையில், அங்கு மனிதாபிமான அடிப்படையில் உடனடியாக போர் நிறுத்தத்தைக் கொண்டுவரக் கோரி ஜோர்டான் அரசு ஐ.நா. பொதுச் சபையில் வரைவுத் தீர்மானம் கொண்டுவந்தது.

தீர்மானத்துக்கு ரஷ்யா, பாகிஸ்தான், மாலத்தீவு, பங்களாதேஷ், தென்னாபிரிக்கா உள்பட 40 நாடுகள் உத்தரவாதம் அளித்திருந்தன. 'பொது மக்களை பாதுகாத்தல் மற்றும் சட்ட, மனிதாபிமான கடமைகளை கடைப்பிடித்தல்' எனத் தீர்மானத்துக்கு தலைப் பிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அந்தத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பை இந்தியா புறக்கணித்தது. அவுஸ்ரேலியா, கனடா, ஜெர்மனி, ஜப்பான், உக்ரைன், பிரிட்டன் உள்ளிட்ட 45 நாடுகளும் வாக்கெடுப்பைப் புறக்கணித்தன. தீர்மானத்துக்கு ஒட்டுமொத்தமாக 120 நாடுகள் ஆதரவும், 14 நாடுகள் எதிர்ப்பும் தெரிவித்தன. அமெரிக்கா எதிர்த்து வாக்களித்ததோடு தீர்மானத்தில் ஓரிடத்தில் கூட ஹமாஸ் அமைப்பினரை ஊடுருவல்காரர்கள் என்று சுட்டிக்காட்டாததை வன்மையாகக் கண்டித்தது.

இந்தி நிலையில் வாக்கெடுப்பைப் புறக்கணித்தது குறித்து ஐ.நா பொதுச் சபைக்கான இந்தியாவின் துணை நிரந்தரப் பிரதிநிதி யோஜனா படேல் கூறுகையில். கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதியன்று இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதல்கள் அதிர்ச்சி அளித்தன. அவை கண்டனத்துக்குரியவை. பணயக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்ட வர்கள் மீது அக்கறை கொண்டுள்ளோம்.

அவர்களை உடனடியாக நிபந்தனைகள் ஏதுமின்றி விடுவிக்க வலியுறுத்துகிறோம்.

பயங்ரவாதம் வேகமாகப் பரவக் கூடியது. அதற்கு எல்லைகள் இல்லை. தேச பேதங்கள் இல்லை. இனவேறுபாடுகளும் இல்லை. ஆகையால் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உலகம் எந்தவித நியாயங்களையும் கற்பிக்கக் கூடாது. வேற்றுமைகளை விலக்கிவைப்போம். ஒன்றுபட்டு பயங்கரவாதத்துக்கு எதிரான முறைகளைக் கையாள்வோம்.

அதேவேளையில் மனிதாபிமான சிக்கல்கள் கவனிக்கப்பட வேண்டும்.

காசாவாசிகளுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்யும் பொருட்டு சர்வதேச சமூகம் எடுத்துவரும் நடவடிக்கைகளை வரவேற்கிறோம். அதற்கு இந்தியாவும் தனது பங்களிப்பைச் செலுத்தியுள்ளது.

போரில் ஈடுபட்டுள்ள இருதரப்புகளும் அமைதிப் பேச்சுக்கான சூழலை உருவாக்க வன்முறையை விடுத்து ஆக்கபூர்வ முன்னெடுப்புகளை மேற்கொள்ள வலியுறுத்துகிறோம்.

ஐ.நா. பொதுச் சபை பயங்கரவாதம், வன்முறைக்கு எதிராக அழுத்தமான செய்தியைக் கடத்தும் என்று நம்புகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேல் இராணுவத்தின் தாக்குதலில் ஹமாஸின் வான்படை தளபதி பலி!

காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹமாஸின் வான்வழிப் பிரிவின் தலைவரான இஸ்லாம் அபு ருக்பே கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேல் உளவு அமைப்பான ஷின் பெட் அறிவித்துள்ளது.

ஹாமஸின் தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேல் மிகத் தீவிரமான பதிலடியைக் கொடுத்து வருகிறது. இஸ்ரேல் தனது அடுத்தடுத்த நகர்வுகளை கண்ணும் கருத்துமாக எடுத்து வைக்கிறது.

இஸ்ரேலின் திட்டமிட்ட தாக்குதலில் ஹமாஸ் அமைப்பு தங்களுடைய முக்கியப் படைத் தளபதிகளை அடுத்தடுத்து இழந்து வருகிறது.

அந்த வகையில் சமீபத்தில் இஸ்ரேல் உடனான போரில் ஹமாஸ் படையின் அப்துல் ரஹ்மான், கலீல் மஹ்ஜாஸ், மற்றும் கலீல் டெத்தாரி ஆகிய மூன்று துணைத் தலைவர்கள் கொல்லப்பட்டனர் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.



இந்த நிலையில், நேற்று ஹமாஸ் அமைப்பின் புலனாய்வு பிரிவின் துணைத் தலைவர் ஷாதி பாரூத் இஸரேலிய பாதுகாப்பு படையின் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

அந்த அதிர்ச்சிகளில் இருந்து ஹமாஸ் அமைப்பினர் மீளுவதற்குள் காசாவில் நேற்று இரவு இஸ்ரேல் வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலில், ஹமாஸின் வான்வழிப் பிரிவின் தலைவரான இஸ்லாம் அபு ருக்பே கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேல் உளவு அமைப்பான ஷின் பெட் தெரிவித்துள்ளது.